(ஆ) மாவட்ட நகராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 1989.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத் மானத்தை மொழிகிறேன்;

''1989-ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச் சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

6. மானியக் கோரிக்கைகள் 1989–90—விவர்தமும், வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.

கோரிக்கை எண். 31.

பழங்குடியினர், ஆதி திராவிடர் முதலியோர் நலன்.

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''மானியக் கோரிக்கை எண். 31—பழங்குடியினர், ஆதி திராவிடர் முதலியோர் நலன் என்ற தலைப்பின் கீழ் ரூ. 76,11,61,000—க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்'',

திரு. எம். அண்ணாமலை : மாண்புமிகு பேரவைத் தலவைர் அவர்களே, ஆதி திராவிட பழங்குடி மாணவ மாணவியர் களுக்கு தனியான புதிய வீடுகள் கட்ட வேண்டிய அவசியம் பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

''மானியக் கோரிக்கை எண். 31—பழங்குடியினர், ஆதி திராவிடர் முதலியோர் நலன் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.76,11,61,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''